**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி.கண்ணதாசன், எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 ஆம் நாள் செவ்வாய் கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆனி மாதம் 09 ம் நாள்**
**அசல் வழக்கு எண் – 56/2010**
**CNR NO: TNAL050000472010**

மாசிலாமணி – வாதி

/எதிர்/

1) அருளரசன்
2) கிராம நிர்வாக அலுவலர், உடையார்பாளையம் (மே)
3) வட்டாட்சியர், ஜெயங்கொண்டம்.
4) தமிழக அரசு REP BY ITS மாவட்ட ஆட்சியர், அரியலூர்.
5) சின்னதுரை
6) சிவானந்தம்
7) வாசிம்ராஜா
8) நவநீதம் அம்மாள்
9) சுந்தரியம்மாள்
10) மும்தாஜ்
11) ராஜேந்திரன்
12) கணபதி
13) சவுரிராஜுலு நாயுடு – பிரதிவாதிகள்

(Amended as per order in IA.01/2022 dated on 15.03.2024.)

இவ்வழக்கானது 23.06.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.சிவம் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6, 9, 11, 12 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராகவும், 7, 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.மணி செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், 8 மற்றும் 13 பிரதிவாதிகள் இறந்த நிலையில் நடவடிக்கை எடுக்காததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்புரை**

தாவா சொத்துக்களில் வாதியின் அனுபவத்தில் 1ம் பிரதிவாதியோ, அவர்களது ஆட்களோ, அல்லது ஏஜெண்டுகளோ, எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்கவும், வில்லங்கம் செய்யாமல் இருக்கவும் வேண்டி, ஒன்றாம் பிரதிவாதிக்கு

எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்துக்களை பொறுத்து 3ம் பிரதிவாதி 12.08.1990ல் போட்ட உத்தரவுப்படி 2, 3 பிரதிவாதிகள் வசமுள்ள ரெவென்யூ ஆதரவுகளில் திருத்தம் செய்ய 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டியும், வாதி தரப்பில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பு சாட்சி 1 அழைத்து ஆஜரில்லை. 7, 10 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1ம் பிரதிவாதி ஆஜர். வழக்கு ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் மாலை 5.20 மணிக்கு அழைத்த போதும் வாதி தரப்பு சாட்சி 1 ஆஜரில்லை. போதிய கால அவகாசம் வழங்கப்பட்ட நிலையில் வாதி தரப்பு சாட்சி 1/ வாதி ஆஜரில்லை. நிபந்தனைகளுடன் கூடிய உத்தரவிட்டும் வாதி தரப்பு சாட்சி 1 ஆஜரில்லை. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/ம.சி.கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

<u>வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

<u>பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

–இல்லை–

ஒப்பம்/ம.சி.கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.